Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
In the Court of Judicial Magistrate No.I Cuddalore.

| | |
|---|---|
| Case Number | : CC.No. 377/2025 |
| Police station | : தூக்கணாம்பாக்கம் P.S |
| Deposition of witness for Prosecution | : Additional witness/ PW2 |
| Name | : திரு. ராஜாராம் சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Father Name/Husband Name | : |
| Village | : |
| Cuddalore | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873, விதிமுறைகளின் படி 26.05.2026 நாளாகிய இன்று SELVI.R.SRINITHI BA. LL.B(HONS) LL.M நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். ).

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது தூக்கணாம்பாக்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகளான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பாஸ்கரன் மற்றும் உதவி ஆய்வாளர் திருமதி. உத்ராம்பாள் ஆகியோரின் கையெழுத்து மற்றும் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சியம். கு.வி.மு.ச. சட்டப் பிரிவு 311ன் படி மனு செய்து சி.எம்.எண். /2026 ன் படி மனு அனுமதிக்கப்பட்டதன் அடிப்படையில் நான் வழக்கின் கோப்பினை பார்வையிட்டு இங்கு சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 21.12.2024 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் பாஸ்கரன் துழக்கணாம்பாக்கம் காவல் நிலையத்தில் நிலைய பொருப்பில் இருந்தபோது நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று நிலைய குற்ற எண். 95/2024 ல் சட்டப் பிரிவுகள் 296(பி), 131, 351(3) BNS படி வழக்கு பதிவு செய்து கணிணி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். **மேற்படி கணிணி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கினை மேல்விசாரணை செய்யவேண்டி வழக்கின் கோப்பினை உதவி ஆய்வாளர் திருமதி. உத்ராம்பாள் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார். வழக்கின் கோப்பினை பெற்றுக்கொண்ட உதவி ஆய்வாளர் திருமதி. உத்ராம்பாள் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார். வழக்கின் கோப்பினை பெற்றுக்கொண்டு மறு நாள் காலை 7 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராமு மற்றும் பரமசிவம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து சாட்சிகள் இருவரிடமும் கையொப்பம் பெற்று அவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். **மேற்படி மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் முறையே அ.சா.ஆ.3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் 7.50 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் அழகிய நத்தம் காலணி வாதியின் வீட்டின் அருகே அங்களான் வீட்டில் TN-31-CB5213- என்ற பதிவெண்கொண்ட Honda Dio இரு சக்கர வாகனம் மற்றும் மர கட்டை கழிகள் இரண்டு ஆகியவற்றை ஒரு கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். **மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் புனிவதி, பக்கிரி, அங்காளன். சதீஷ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து வழக்கின் சம்பவத்தை உறுதிபடுத்திக்கொண்டு வழக்கின் எதிரிகளை தேடிப்பார்த்ததில் 1, 2 எதிரிகள் செங்கதிர் மற்றும் கார்த்திக்ராஜா ஆகியோர்களை வெள்ளப்பாக்கம் ரோட்டில் உள்ள காளி கோவில்

அருகில் 22.12.2024ம் தேதி 14 மணிக்கு காரணம் கூறி கைது செய்தும் கைதுக்கான காரணத்தை உறவினர்களுக்கு தெரிவித்தும், கடலூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்தில் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். இவ்வழக்கின் 1, 2 எதிரிகள் 26.12.2024ம் தேதி கடலூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றத்தில் ஜாமீன் பெற்று உரிய பிணையில் வெளிவந்துள்ளதால், இவ்வழக்கின் 3, 4 எதிரிகள் செம்பருத்தி மற்றும் திலிப்குமார் 04.01.2025 ம் தேதி மாவட்ட அமர்வு நீதிமன்றம் மூலம் முன் ஜாமீன் பெற்று சமூகம் நீதிமன்றத்தில் சரணடைந்து உரிய பிணையில் வெளிவந்தது தெரியவந்ததால் பின்னர் அன்றைய தினமே வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் பாஸ்கரன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று அத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் செங்கதிர், கார்த்திக்ராஜா, செம்பருத்தி, திலிப்குமார் ஆகியோர்களுக்கு எதிராக சட்டப் பிரிவுகள் 296(பி), 131, 351(3) இதசாவின் படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**</u>

வழக்கு பற்றி நேரடியாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் கோப்புகள் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1னிடம் எழுதப்படாத வெள்ளை தாளில் பெறப்பட்ட புகாரை பின்னிட்டு தயாரித்து எதிரிகளுக்கு எதிராக ஒரு பொய்யான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்டு எதிரிகளுக்கு எதிராக ஒரு பொய்யான இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் கைது

செய்யவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக தயார் செய்யப்பட்ட வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.